திருக்குலமே எழுந்திடுக அருள் பொலியும்

திருக்குலமே எழுந்திடுக அருள் பொலியும் பலியினிலே
ஒருங்கிணைவோம் கரம்குவிப்போம் உன்னதரைப் போற்றுவோம (2)
ஆகா சந்தோசம் பெருகிடுதேஅவர் சன்னிதி காண்கையிலே (2)

1
ஆனந்தமுடனே அவர் திருமுன்னே கூடிடுவோம் கூடிடுவோம்
ஆண்டவரே நம் கடவுள் என்று பாடிடுவோம் பாடிடுவோம (2)
அவரே நம்மைப் படைத்தார் அவருக்கே சொந்தம் நாம்
அவர் படைப்புகள் நாம் அவர் பிள்ளைகள் நாம்
அவர் மந்தையின் ஆடுகள் நாம்

2
இன்னிசை முழங்க இறைவன் வாசல் நுழைந்திடுவோம்
நுழைந்திடுவோம்
பண்ணிசையோடு அவரது பீடம் சூழ்ந்திடுவோம் சூழ்ந்திடுவோம (2)
அவரைப் புகழ்ந்திடுவோம் அவர் பெயர் வாழ்த்திடுவோம்
அவர் நல்லவராம் அவர் வல்லவராம் அவர் அன்பே நம்மை நடத்தும்;
இறையாட்சி மலரவேண்டும்